## இரத்த ஏற்றம் செய்துகொள்வதைப் பற்றிய தகவல்கள்:

இரத்தம் ஏற்றம் செய்துகொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு ஏன் எழக்கூடும், மற்றும் இச்சமயத்தில் நீங்கள் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதைப் பற்றி இத் தகவல் ஏடு விளக்குகிறது.

## இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை எனக்கு ஏன் எழக்கூடும்?

கீழ் வரும் தருணங்களில் இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை உங்களுக்கு எழக்கூடும்:

> அறுவைசிகிச்சையின் போது, குழந்தை பிறப்பின் போது அல்லது பாரியதொரு விபத்தின் காரணமாக அதியளவு இரத்தத்தை நீங்கள் இழக்கும்போது

> இரும்புச்சத்து அல்லது வேறு வைட்டமின்களால் மட்டும் குணப்படுத்தவியலாத இரத்த சோகை நோய் (இரத்தச்சிவப்பணுக்களின் போதாமை) இருக்கும்போது.

> போதுமான அளவு இரத்த சிவப்பணுக்களை உங்கள் சரீரத்தினால் உற்பத்தி செய்ய இயலாதபோது. எலும்பு மஜ்ஜை (bone marrow) பிரச்சினையின் காரணமாக அல்லது 'கெமோதெரபி' எனப்படும் புற்றுநோய்ச் சிகிச்சையின் விளைவுகளின் காரணமாக இது இருக்கலாம்.

## இரத்தம் ஏற்றுதல்களின் வெவ்வேறு வகைகள் யாவை?

தானத்தின்மூலம் பெறப்பட்ட இரத்தம் வெவ்வேறு பகுதிகளகப் பிரிக்கப்பட்டு விசேடமான பைகள் அல்லது போத்தல்களில் அடைக்கபட்டு இருப்பில் வைக்கப்படுகின்றன. இந்த 3 பிரதானமான பகுதிகளில் பின் வருபவை உள்ளடங்கும்:

> திசுக்களுக்கும், உறுப்புக்களுக்கும் பிராண வாயுவைச் சுமந்து செல்லும் இரத்த சிவப்பணுக்கள்

> இரத்தக் கசிவை நிறுத்த உதவும் 'இரத்த வட்டுகள்' (platelets)

> இரத்த உறைவிற்குத் தேவைப்படும் கூறுகளையும் (இவை இரத்தக்க் கசிவை நிறுத்த உதவும்), மற்றும் இதர புரதங்கள் (proteins) மற்றும் நோயெதிர்ப்பு வஸ்துக்களையும் (antibodies) கொண்டுள்ள 'இரத்தநீர்' (plasma).

## இரத்த ஏற்றம் செய்துகொள்வதில் உள்ள ஆபத்துக்கூறுகள் யாவை?

உலகிலேயே மிகப் பாதுகாப்பான இரத்த வழங்கல் முறைகளில் ஒன்றை அவுஸ்திரேலியா கொண்டுள்ளது, ஆனாலும் அனைத்து மருத்துவ செயல்முறைகளிலும் உள்ளது போல இரத்தம் ஏற்றலில் ஆபத்து இல்லாமல் இல்லை.

பின் வருவன இரத்தம் ஏற்றலில் உள்ள மிகப் பொதுவான ஆபத்துகளாகும்:

> மிதமான சுரம் அல்லது தோல் கொப்புளங்கள்

> திரவ வஸ்து உடலில் அதிகமாவதன் காரணமாக, குறிப்பாக வயதானவர்கள் மற்றும் இதயப் பிரச்சினை உள்ளவர்களுக்கு, ஏற்படும் சுவாசச் சிரமங்கள்.

இரத்தம் ஏற்றுவதால் ஏற்படும் மிகக் குறைவான ஆபத்துகளில் உள்ளடங்குவன:

> உங்களுக்குப் 'பொருந்தாத' இரத்தம் ஏற்றப்படுவது.

> மிகவும் வினயமான எதிர்வினைகள், உதாரணமாக, ஒவ்வாமை அல்லது தீவிர நுரையீரல் காயம்.

> நோய்த்தொற்றுகள் கடத்தப்படுவது, உதாரணமாக, நுண்ணுயிர்கள் அல்லது வைரஸ் கிருமிகள்.

எதிர்வினைகள் ஏற்படுகின்றனவா என்று உன்னிப்பாய்க் கவனிக்கவும் உடனடியாகச் செயல்படவும் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

## இரத்த ஏற்றம் செய்யப்படுவது எப்படி?

பொதுவாக உங்களது புஜம் அல்லது கையில் மென்மையான பிளாஸ்டிக் குழாய் ஒன்றைப் பயன்படுத்தி இரத்தநாளம் வழியாக இரத்தம் சொட்டு சொட்டாக உட்செலுத்தப்படும்.

ஒவ்வொரு இரத்தப் பொதி(unit)யையும் உட்செலுத்த 4 மணி நேரம் வரை ஆகலாம், ஆனாலும் தேவைப்பட்டால் இன்னும் விரவாகக் கொடுக்கலாம்.

சோதனைக்காக மாதிரி இரத்தம் எடுக்கும்போதும், உங்களுக்கு இரத்த ஏற்றம் செய்யப்படுவதற்கு முன்பாகவும் உங்களுடைய அடையாளத்தைப் பற்றிய கறாரான சோதனைகளை மருத்துவப் பணியாளர்கள் மேற்கொள்வர். உங்களுடைய அடையாளப் பட்டையை அணிந்துகொள்வதும், கேட்கும்போது உங்களுடைய முழுப் பெயரையும் பிறந்த திகதியையும் சொல்ல வேண்டியதும் முக்கியம். தவறான இரத்தம் (இன்னொருவருக்குக் கொடுப்பதற்காக உள்ள இரத்தம்) உங்களுக்குத் தரப்படுவதைத் தடுக்கவே இப்படிச் செய்யப்படுகிறது. பணியாளர்கள் உங்களது அடையாளத்தினைச் சோதிக்கும்போது பிரச்சினை ஏதும் இருந்தால் அதை வெளிப்படையாகத் தெரிவியுங்கள். உங்களைப் பற்றிய விபரங்கள் (எழுத்துக்கள் உள்ளடங்க) 100 சதவீதம் சரியாயாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

Government of South Australia
SA Health

© Department of Health and Wellbeing, Government of South Australia
All rights reserved. BloodSafe TP-L3-v2.1 2023

## இரத்த ஏற்றம் செய்யப்படும்போது எனக்கு எப்படியிருக்கும்?

இரத்த ஏற்றம் செய்யப்படும்போது பெரும்பான்மையோருக்கு வித்தியாசமான உணர்வுகள் இருக்காது. சிலருக்கு மிதமான சுரம், குளிர் அல்லது கொப்புளங்கள் ஏற்படக்கூடும். பொதுவாக, மிதமான எதிர்வினை அல்லது ஒவ்வாமை இவற்றிற்குக் காரணமாகும். மருந்துகள் மூலமாக (சுரத்தைக் குறைக்க), அல்லது இரத்தத்தை இன்னும் மெதுவாகக் கொடுப்பதன் மூலமாக இதற்குச் சிகிச்சையளிக்கலாம்.

இரத்த ஏற்றத்தின்போது பிரச்சினைகள் ஏதும் ஏற்படுகின்றனவா என்று பணியாளர்கள் உங்களை உன்னிப்பாகக் கண்காணிப்பர். அவ்வப்போது தவறாமல் உங்களுடைய நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் உடலின் இயல்வெப்பநிலை ஆகியவற்றைச் சோதிப்பதை இது குறிக்கும். இரத்த ஏற்றத்தின் போது உங்களுக்குச் சிறிதளவே சுகமில்லாமல் இருப்பது போல் இருந்தாலும், தயக்கமின்றி நேரடியாக அதை தாதிக்குத் தெரியப்படுத்திவிட வேண்டியது முக்கியம்.

## இரத்த ஏற்றம் வேண்டாம் என்று என்னால் மறுக்க இயலுமா?

சிகிச்சை எடுத்துக்கொள்வது உங்களது விருப்பம். வேண்டாம் என்று மறுக்கும் உரிமை உங்களுக்குள்ளது, ஆனால் அப்படிச் செய்வதற்கு முன்பு இதன் பின்விளைவுகளை நீங்கள் முற்றிலும் விளங்கிக்கொள்ள வேண்டும். இரத்த ஏற்றம் வேண்டாம் என்று நீங்கள் சொல்வதற்குக் காரணம் ஏதுமிருந்தால், தயவு செய்து உங்கள் மருத்துவருக்கு அதைத் தெரிவியுங்கள்.

## உங்கள் மருத்துவரிடம் நீங்கள் கேட்க வேண்டியது

- ☐ இரத்த ஏற்றம் எனக்கு ஏன் தேவைப்படுகிறது?
- ☐ என்னுடைய விடயத்தைப் பொறுத்தவரை எனக்குள்ள ஆதாயங்கள் மற்றும் ஆபத்துக்கூறுகள் யாவை?
- ☐ வேறெந்த விருப்பத்தெரிவுகளாவது உள்ளனவா?
- ☐ உங்களுக்குப் புரியாத விடயங்கள், நீங்கள் கவலைப்படும் விடயங்கள் அல்லது விளக்கிச் சொல்லப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பும் விடயங்கள்.

திட்டமிடப்பட்ட அறுவைசிகிச்சை ஒன்றை நீங்கள் மேற்கொண்டீர்களானால்:

- ☐ இரத்த ஏற்றம் செய்துகொள்ள வேண்டிய எனது தேவையைக் குறைக்கும் விதத்தில் நான் செய்யக்கூடிய ஏதும் உள்ளதா?
- ☐ இரத்த சோகை அல்லது இரும்புச்சத்துக் குறைவு எனக்கு ஏற்பட ஆரம்பித்திருக்கிறதா, மற்றும் இதை எவ்வாறு சரி செய்ய இயலும்?
- ☐ இந்த அறுவைசிகிச்சையின் போது நான் இழக்கும் இரத்தத்தைச் சேகரித்து அதைத் திரும்பத் தர இயலுமா?

## உங்கள் மருத்துவரிடம் நீங்கள் சொல்ல வேண்டியவை

- ☐ இரத்த ஏற்றம் வேண்டாம் என்று நீங்கள் மறுப்பதற்கு உங்களிடமிருக்கும் காரணம் ஏதும்
- ☐ கடந்த காலத்தில் இரத்த ஏற்றம் செய்துகொள்ளும்போது ஏற்பட்டிருந்த எதிர்வினை அல்லது பிரச்சினை ஏதும்
- ☐ இரத்த ஏற்றம் செய்துகொள்வதற்கான விசேட தேவைகள் ஏதும்
- ☐ இரத்தப்போக்கை அதிகரிக்கக் கூடிய 'இரத்த மெலிதாக்கி' (blood thinners) மருந்துகள் எதையும் நீங்கள் எடுத்துக்கொண்டிருந்தால் ('ஆஸ்ப்ரின்' (aspirin), 'வார்பாரின்' (warfarin), 'க்ளோபிடோக்ரெல்' (clopidogrel), 'அபிக்ஸபான்' (apixaban), 'டபிகாட்ரன்' (dabigatran), 'ரிவராக்ஸபான்' (rivaroxaban) போன்ற மருந்துகள்). நீங்கள் அறுவைசிகிச்சை மேற்கொண்டால், அறுவைச்கிச்சைக்கு முன்பாக இந்த மருந்துகளை நிறுத்த வேண்டுமா என்றும், எப்போது நிறுத்த வேண்டும் என்றும் உங்கள் மருத்துவரைக் கேளுங்கள். தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள், உங்களுடைய பாதுகாப்பை முன்னிட்டு, இந்த முடிவை உங்களது மருத்துவர்தான் எடுக்க வேண்டும், ஏனெனில் இவற்றை நிறுத்துவதால் கிடைக்கும் பலன்களை விட ஆபத்து அதிமாக இருக்கக்கூடும்.
- ☐ வேறெந்த மருந்துகளையாவது (மூலிகை மருந்துகள் உட்பட), மற்றும் நேரடியாக வாங்கக்கூடிய மருந்துகள் (மருந்துச் சீட்டு இல்லாமல்) எதையாவது நீங்கள் எடுத்துக்கொண்டிருந்தால் - ஏனெனில் இவற்றில் சில இரத்தத்தை மெலிதாக்குபவையாக இருக்கக்கூடும்.

## இரத்த ஏற்றம் செய்துகொள்வதைப் பற்றி வேறெந்தக் கவலையும் எனக்கு இருந்தால் என்ன செய்வது?

வேறெந்தக் கரிசனங்களாவது உங்களுக்கு இருந்தால், அவை எவ்வளவுதான் சிறியவை என்று நீங்கள் நினைத்தாலும், நீங்கள் உங்களுடைய மருத்துவர், தாதி அல்லது மருத்துவச்சியுடன் பேச வேண்டும்.

மேலதிகத் தகவல்களுக்கு:
உங்களுக்கு இணைய வசதி இருந்து இரத்த ஏற்றம் குறித்து நீங்கள் மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், www.lifeblood.com.au/patients எனும் வலைத்தளம் உங்களுக்குப் பயனளிப்பதாக இருக்கக்கூடும்.

The English language version of this document has been reviewed and endorsed by CAG* for consumers and the community – January 2023
*SA Health Community Advisory Group

Government of South Australia
SA Health

BloodSafe

நோயாளிகளுக்கான விடயங்கள் கிடைக்குமிடம்:
www.sahealth.sa.gov.au/bloodorgantissue

© Department of Health and Wellbeing, Government of South Australia
All rights reserved. BloodSafe TP-L3-v2.1 2023